# பிரார்த்தனை வேளை

## (விடுதலைக்காக)




# முழங்கால் யுத்தம்

தேவ ஊழியர் L. ஜோசப்

# முழங்கால் யுத்தம்

## பிரார்த்தனை நேரம்
## (விடுதலைக்காக)



குமாரன் (இயேசுகிறிஸ்து) உங்களை
விடுதலையாக்கினால் மெய்யாகவே
விடுதலையாவீர்கள் (யோவா 8:36)

தேவ ஊழியர்

L. ஜோசப்

# உங்களோடு
# சில வரிகள்...

**நீதிமான்களுடைய சந்ததியோ விடுவிக்கப்படும் (நீதி 11:21)**

**ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உன்னத திருநாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.**

கர்த்தருடைய பெரிதான கிருபையால் முழங்கால் யுத்தம் - பிரார்த்தனை நேரம் (விடுதலைக்காக) என்கிற இந்த சிறிய ஜெபக் கையேட்டை வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி யடைகிறோம். இயேசு கிறிஸ்துவை அறிந்தோரும் அவரை உள்ளத்தில் மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டோரும் தங்கள் வாழ்வில் காணப்படும் பாவங்கள், சாபங்கள், பிரச்சினைகள், வேதனைகள், வருத்தங்கள் நீங்கி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள இயேசுகிறிஸ்துவிடம் ஜெபிப்பதற்காக இக்கையேட்டினை ஜெபத்தோடு ஆயத்தப்படுத்தி யுள்ளோம். விடுதலையைப் பெற்றுகொள்ள எப்படி ஜெபிக்க வேண்டுமென தெரியாதவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நீங்கள் விசவாச

முள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ; அவைகளையெல்லாம் பெறுவீர்கள் (மத் 21:22) என்ற வேத வசனத்தின்படி இயேசு கிறிஸ்துவிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள மாதிரி ஜெபங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. விசுவாசத்தோடு தேவனுக்கு ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி ஜெபங்களை தேவ சமுகத்தில் தினமும் ஏறெடுக்கும்பொழுது, எல்லாத் தடைகளும் நீங்கி நீங்கள் எதிர்ப்பார்க்கிற விடுதலையும், ஆசீர்வாதமும் உங்கள்மேல் வந்து பலிக்கும் என்பது உண்மை. ஆகவே, விசுவாசத்தோடும் எதிர்பார்ப்போடும் ஜெபியுங்கள், தேவனிடமிருந்து ஜெயத்தையும் சுகத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள். இயேசுகிறிஸ்து உங்கள் பிரார்த்தனையைக் கேட்டு நிச்சயமாய் அற்புதம் செய்து ஆசீர்வதிப்பாராக.

அன்பும் ஜெபமும்

L. ஜோசப்

**ஜெபத்தைக் கேட்கிறவரே... ஜெபத்தை ஏற்றுக்கொள்பவரே... (சங் 65:2; 6:9)**

# விடுதலை தரும் இயேசு

**குமாரன் (இயேசு) உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோவா 8:36)**

- ★ இயேசு பாவ சாப வியாதியின் கட்டுக்களிலிருந்து முற்றிலும் நம்மை விடுவிப்பார் (சங் 50:15)
- ★ இயேசு நம்மை மனுஷரின் சதியோசனைகளுக்கு நீங்கலாக்கி விடுவிப்பார் (ஆதி 37:18)
- ★ இயேசு தம்மிடம் வாஞ்சையாய் இருக்கிறவனை விடுவிப்பார் (சங் 91:14)
- ★ இயேசு தம்மை தாபரமாக கொண்டு உறுதியாய் நம்புவோரை விடுவிப்பார் (சங் 22:4)
- ★ இயேசு நம்மேல் கிருபையாய் மனமிரங்கி நம்மை விடுவிப்பார் (மத் 18:27)
- ★ இயேசு இக்கட்டுகளுக்கு நம்மை நீங்கலாக்கி விடுவிப்பார் (சங் 107:28)

★ இயேசு இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுவிப்பார் (கொலோ 1:13)

★ இயேசு பாவத்தின் கட்டுகளிலிருந்து நம்மை விடுவிப்பார் (ரோம 6:22)

★ இயேசு சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி விடுவிப்பார் (கலா 3:13)

★ இயேசு உங்கள் பலவீனத்தினின்று நம்மை விடுவிப்பார் (லூக் 13:12)

★ இயேசு மனுஷர் செய்யும் இடுக்கண்களுக்கு நம்மை நீங்கலாக்கி விடுவிப்பார் (சங் 119:134)

★ இயேசு துன்மார்க்கரின் கைக்கு நம்மை நீங்கலாக்கி விடுவிப்பார் (தானி 3:17)

★ இயேசு எல்லாவிதமான இக்கட்டுகளுக்கு நம்மை நீங்கலாக்கி விடுவிப்பார் (சங் 107:28)

★ துர்க்குணராகிய பொல்லாத மனுஷரின் கையினின்று நம்மை விடுவிப்பார் (2தெ 3:2)

**நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார் (சங் 34:19)**

# தலைப்புகள்


1. பாவத்திலிருந்து விடுபட ஜெபம் ... 10

2. சாபங்கள் நீங்க ஜெபம் ... 12

3. பயம், கலக்கங்கள் நீங்க ஜெபம் ... 14

4. தனிமை உணர்வு மாற ஜெபம் ... 16

5. போராட்டங்கள் நீங்க ஜெபம் ... 20

6. பில்லிசூனிய கட்டுகள் உடைய ஜெபம் ... 23

7. சாத்தானின் கிரியைகள் முறிய ஜெபம் ... 26

8. கடன் பிரச்சினைகள் மாற ஜெபம் ... 28

9. குறைவுகள் நிறைவாக ஜெபம் ... 30

10. நல்ல வேலை கிடைக்க ஜெபம் ... 32

11. புதிய தொழில் துவங்க ஜெபம் ... 34

12. எடுத்த காரியத்தில் வெற்றிபெற ஜெபம் ... 36

13. பதவி உயர்வு கிடைக்க ஜெபம் ... 38

14. உறவினர்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபம் ... 40

# இயேசு கற்றுத் தந்த ஜெபம்

**மத்தேயு 6:9-13**

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.

எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்

எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென் றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.

# தேவனைத் துதிப்போம் ஸ்தோத்திரிப்போம்

**ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான் (சங்கீதம் 50:23)**

★ துதிக்கும், மகிமைக்கும் பாத்திரரே!

★ ஜெபத்தைக் கேட்கிறவரே!

★ ஜெபத்தைத் தள்ளாதவரே!

★ ஜெபத்திற்கு பதில் தருகிறவரே!

★ மிகுந்த வல்லமையுடையவரே!

★ சாத்தானை ஜெயித்தவரே!

★ அற்புதங்களைச் செய்கிறவரே!

★ மகத்துவமானவரே!

★ மாட்சிமை நிறைந்தவரே!

★ மிகுந்த கிருபையுள்ளவரே!

★ சிலுவையை சமந்தவரே!

★ பாவிகளை இரட்சிக்க வந்தவரே!

★ மிகுந்த இரக்கமுள்ளவரே!

★ பாவங்களை மன்னிக்கிறவரே!

★ சாபங்களை நீக்குகிறவரே!

★ கட்டுகளை உடைக்கிறவரே!

★ வியாதிகளை விலக்குபவரே!

★ நோய்களைக் குணமாக்குகிறவரே!

★ குருடர்களைக் காணச் செய்பவரே!

★ முடவர்களை நடக்கச் செய்பவரே!

★ செவிடர்களை கேட்கச் செய்பவரே!

★ மரித்தோரை உயிர்ப்பிக்கிறவரே!

★ கிருபையாய் நேசிக்கிறவரே!

★ ஆசீர்வதித்து உயர்த்துகிறவரே!

★ அனுதினமும் போஷிக்கிறவரே!

★ எங்களை ஆற்றித் தேற்றுகிறவரே!

★ ஆதரவாய் இருப்பவரே!

★ எங்களை மறவாதவரே!

★ தீமைக்கு விலக்கி காப்பவரே!

**இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக (சங் 113:2)**

# 1. பாவத்திலிருந்து விடுபட ஜெபம்

**இயேசு நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார் (அப் 10:38)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

விடுவிக்கும் வல்ல தேவனே, என்னை உம்முடைய கிருபையுள்ள கரங்களில் முழுவதும் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன். கொடிய பாவத்தின் அடிமைத்தன நுகத்தை முறிக்கிறவரே, நான் பல வருடங்களாக சிக்கித் தவித்து வருகிற இந்த குறிப்பிட்ட ........................................ பாவப் பழக்கத்திலிருந்து என்னை விடுவித்து காக்கும்படி கெஞ்சி மன்றாடுகிறேன்.

தேவனே, மீண்டும் மீண்டும் இந்த பாவப் பழக்கத்திற்கு நான் அடிமைப்படுத்தாதபடிக்கு என்மேல் கிருபையாய் இரும். பாவங்களை

மன்னிக்கிற இயேசுவே, இதுவரை உமக்கு விரோதமாக நான் துணிகரமாய் செய்து வந்த எல்லாப் பாவங்களையும் தயவாய் மன்னித்தருளும். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்ற உம்முடைய வசனத்தின்படி என்னை உமது திருஇரத்தத்தினால் கழுவி சுத்திகரித்தருளும். ஆண்டவரே, இந்த பாவத்தை நான் தொடர்ந்து செய்யாதபடி என்னை தடுத்தாட்கொள்ளும். சத்துருவின் சகல வல்லமைகளையும் மேற்கொள்ள அதிகாரம் கொடுத்த இயேசுவின் நாமத்தினால் என்னை இந்தப் பாவத்திற்கு அடிமைப்படுத்தும் சாத்தானின் சகல கிரியைகளை கடிந்துகொள்ளுகிறேன். கர்த்தாவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு இந்த கொடிய பாவப்பழக்கத்திலிருந்து என்னை விடுவித்து உமக்காக ஜெயமுள்ள வாழ்க்கை வாழ எனக்கு உதவி செய்வதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் தாழ்மையோடு வேண்டி ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே, ஆமென்.

**இயேசுகிறிஸ்து உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோவா 8:36)**

# 2. சாபங்கள் நீங்க ஜெபம்

**உன் தேவனாகிய கர்த்தர் உன்மேல் அன்பு கூர்ந்தபடியினால்... அந்தச் சாபத்தை உனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணினார் (உபா 23:5)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

எந்த சாபத்தையும் நீக்கும் சர்வ வல்லமையுள்ள இயேசுவே, என் ஆவி ஆவித்துமா சரீரத்தை உமது பரிசுத்தமுள்ள கரரத்தில் ஒப்புவித்து ஜெபிக்கிறேன். பலவிதமான சாபத்தால் பாதிக்கப்பட்டு மிகுந்த கண்ணீரோடும், பிரச்சினையோடும், போராட்டத்தோடும் வாழ்ந்து வரும் என்னை நீர் தயவாய் பரலோகத்தில் இருந்து கண்ணோக்கிப் பார்த்து உதவியருளும்.

பாவத்தையும், சாபத்தையும் நீக்குகிற இயேசுவே, என்னுடைய முன்னோர்கள் மெய் தேவனாகிய உம்மையும், உமது வேதத்தையும் அறியாமல், தங்கள் விருப்பத்தின்படி பாரம்பரியமாய் வாழ்ந்து

உமக்கு விரோதமாக அறிந்தும், அறியாமலும் செய்த எல்லாப் பாவங்களையும், அக்கிரமங்களையும் தயவாய் மன்னியும். என்னை உம் பிள்ளையாக ஏற்றுகொள்ளும். என்னுடைய முன்னோர்களின் பாவங்களினால் வந்த எல்லா சாபங்களையும் நீர் விலக்கி என்னை இரட்சியம். இயேசுவே, என் வாழ்வில் காணப்படும் எல்லாப் பாவங்களையும் கிருபையாய் மன்னித்து என்னை உம் பிள்ளையாக ஏற்றுக்கொள்ளும். உமது சமாதானத்தினாலும், சந்தோஷத்தினாலும் என்னை நிரப்பியருளும்.

ஆண்டவரே, தலைமுறை சாபங்கள் என்னை தொடர்ந்து தாக்காதபடி இரத்தத்தினால் என்னை மறைத்துகொள்ளும். சாபத்தின் வல்லமைகள் விலகட்டும். இயேசுவின் நாமத்தினால் சாபங்கள் ஆசீர்வாதங்களாக மாறட்டும். தேவனே, என்னையும், குடும்பத்தையும், வேலையையும், தொழிலையும் ஆசீர்வதித்து மேன்மைப்படுத்தும். நீர் அப்படியே செய்வதற்காக உமக்கு நன்றி. இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமுள்ள திருநாமத்தில் ஜெபிக்கிறேன் வல்லமையுள்ள பிதாவே, ஆமென்.

**இயேசுகிறிஸ்து நமக்காகச் சாபமாகி... சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் (கலா 3:13)**

# 3. பயம், கலக்கங்கள் நீங்க ஜெபம்

**இயேசு... ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளான வர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார் (எபி 2:14,15)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

இயேசுவே, என்னை உம்முடைய இரக்கமுள்ள கரங்களில் ஒப்புவிக்கிறேன். பல நாட்களாக, மாதங்களாக, வருடங்களாக பயத்தோடும், கலக்கத்தோடும், வேதனையுடன் வாழ்ந்துவரும் என்னைக் கண்ணோக்கிப் பாரும். பயத்திலிருந்து விடுவிக்கிற இயேசுவே, என்மேல் கிருபையாய் மனமிரங்கி என்னை விடுவித்தருளும். பயத்தையும், திகிலையும் கொண்டுவந்து என்னை வேதனைப் படுத்தும் சத்துருவின் ஆளுகையில் இருந்து எனக்கு பரிபூரண விடுதலையைத் தந்து ஆசீர்வதியும். உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக என்று சொன்னவரே,

எனக்குள் காணப்படும் பயத்தையும், கலக்கத்தையும் என்னை விட்டு நீக்கி தைரியத்தையும், திட நம்பிக்கையையும் தந்தருளும். பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைக் கொடுத்து, என் கண்ணீரைத் துடைத்தருளும்.

ஆண்டவரே, இருள் சூழ்ந்த என் வாழ்வை வெளிச்சமாக்கும். உமது முகத்தை என்மேல் பிரசன்னமாக்கும். உமது முகத்தின் ஒளியை என்னில் பிரகாசிக்கப்பண்ணும். மெய்யான சமாதானத்தை வைத்துப்போனவரே, உமது மகிழ்ச்சியினாலும், சந்தோஷத்தினாலும் என்னை இடைகட்டும். இயேசுவே, உமது இரத்தத்தில் என்னை மறைத்தருளும். இயேசுவே நீர் என்னை பயத்திலிருந்து விடுதலையாக்கினதற்காக உமக்கு ஸ்தோத்திரம். **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் வல்லமையுள்ள பிதாவே, ஆமென்.**

**தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக்கொடாமல்,**
**பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே**
**கொடுத்திருக்கிறார் (2தீமோ 1:7)**

# 4. தனிமை உணர்வு மாற ஜெபம்

**என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார் (சங் 27:10)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

துணையாளராகிய கர்த்தாவே, உம்முடைய கரங்களில் என்னை ஒப்புவிக்கிறேன். தாயைப் போல் தேற்றி, தந்தையை போல் அரவணைத்து காப்பவரே, இப்பொழுதும் என்னுடைய தனிமை உணர்வு மாறும்படி உமது சமுகத்தில் கண்ணீரோடு ஜெபிக்கிறேன். எல்லாராலும் கைவிடப்பட்டு தனிமையின் சூழலில் இருக்கும் என்னை நினைத்தருளும். என் தாய் தகப்பனால், சகோதர சகோதரிகளால், உற்றார் உறவினர்களால், நண்பர்களால், நான் நம்பினவர்களால் எல்லா விதத்திலும் கைவிடப்பட்டு தனிமையில் சிக்கித் தவிக்கும் என்னை இப்பொழுதே தயவாய் கண்ணோக்கிப் பார்த்தருளும்.

ஆண்டவரே, நான் ஆதரவற்ற நிலையில் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், மன அமைதியையும் இழந்து வேதனையோடும், கண்ணீரோடும், கவலையோடும் இருப்பதை நீர் அறிவீர். நான் தனிமை உணர்வினால் பாதிக்கப் படாதபடி உமது தெய்வீக அன்பினாலும் தைரியத்தினாலும் என்னை நிரப்பியருளும். என்னை பெலப்படுத்தும். தைரியப்படுத்தும். என் கண்ணீரைத் துடைத்து ஆறுதல்படுத்தும். இயேசுவே, நீர் என்னோடு இருப்பதையும், எனக்கு துணையாயிருந்து, என்னை ஆசீர்வதித்து உயர்த்துவதையும் மற்றவர்கள் காணும்படி கிருபை செய்தருளும். ஆண்டவரே, நீரே எனக்கு தகப்பனாகவும், தாயாகவும் இருந்து அனுதினமும் கரம் பிடித்து நடத்தும். நீர் என் ஜெபத்தைக் கேட்டு உம்முடைய சமாதானத்தினாலும், சந்தோஷத்தினாலும் தைரியத்தினாலும் என்னை நிரப்பி ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி. **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஜெபம் கேளும் நல்ல பிதாவே, ஆமென்.**

**ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களை தேற்றுவேன் (எசா 66:13)**

# தனிமை உணர்வு மாற தியான பகுதி

**சங்கீதம் 86**

1. கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்து, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்; நான் சிறுமையும் எளிமையுமானவன்.

2. என் ஆத்துமாவைக் காத்தருளும், நான் பக்தியுள்ளவன்; என் தேவனே, உம்மை நம்பியி ருக்கிற உமது அடியேனை நீர் இரட்சியும்.

3. ஆண்டவரே, எனக்கு இரங்கும், நாடோறும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.

4. உமது அடியேனுடைய ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும்; ஆண்டவரே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.

5. ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக் கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர்.

6. கர்த்தாவே, என் ஜெபத்திற்குச் செவி கொடுத்து, என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கவனியும்.

7. நான் துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்; நீர் என்னைக் கேட்டருளுவீர்.

8. ஆண்டவரே, தேவர்களுக்குள்ளே உமக்கு நிகருமில்லை; உம்முடைய கிரியைகளுக்கு ஒப்புமில்லை.

9. ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் வந்து, உமக்கு முன்பாகப் பணிந்து, உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள்.

10. தேவரீர் மகத்துவமுள்ளவரும் அதிசயங்களைச் செய்கிறவருமாயிருக்கிறீர்; நீர் ஒருவரே தேவன்.

11. கர்த்தவே, உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்திலே நடப்பேன்; நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்.

12. என் தேவனாகிய ஆண்டவரே உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து, உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன்.

13. நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது; என் ஆத்துமாவைத் தாழ்ந்த பாதாளத்திற்கு தப்புவித்தீர்.

# 5. போராட்டங்கள் நீங்க ஜெபம்

**உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய் (ஏசா 41:12)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

அன்புள்ள கர்த்தாவே, என்னை உமது பாதுகாப்பின் கரங்களில் ஒப்புவிக்கிறேன். நீர் என்னை பொல்லாத மனிதர்களின் கைகளுக்கும், சாத்தானின் நூதன கிரியைகளுக்கும் என்னை விலக்கிக் காத்துக்கொள்ளும். மன்னிக்கிறதற்கு தயை பெருத்தவரே, நான் படிக்கும் பள்ளி கல்லூரியில், பணிபுரியும் இடத்தில், தொழில் ஸ்தலத்தில், வீட்டின் அருகில் எனக்கு எதிராக எழும்பும் ஜனங்களுக்காக ஜெபிக்கிறேன்.

தேவரீர் அவர்களை மன்னித்து, அவர்கள் தங்கள் தவறுகளை உண்மையாய் உணர்ந்து மனந்திரும்பி குணப்படும்படி கிருபை செய்தருளும். அவர்கள் சுபாவ அன்புள்ளவர்களாக நடந்து என்னுடன் சமாதானத்தோடு இருக்க உதவி

செய்தருளும். இயேசுவே, எனக்கு விரோதமாக மனிதர்களை எழுப்பி அவர்கள் உள்ளத்தில் வஞ்சகத்தையும், எரிச்சலையும், பொறாமையையும், விரோதத்தையும் விதைக்கும் சாத்தானின் சகல விதமான கிரியைகளையும் இயேசுவின் நாமத்தினால் கடிந்துகொள்ளுகிறேன்.

இயேசுவே, எனக்கு எதிராய் எழும்புகிற மனிதர்களை என்னோடு சமாதானமாகும்படி செய்தருளும். அவர்கள் உள்ளத்தில் என்னைக் குறித்து நல்ல எண்ணத்தைத் தந்தருளும். எல்லா வகையிலும் எனக்கு உதவி செய்கிறவர்களாய் அவர்களை மாற்றியருளும். தீமையை நன்மையாக மாற்றுகிறவரே, சாத்தானால், மனிதர்களால் உண்டாகும் போராட்டங்கள் நீங்கட்டும், தடைகள் மாறட்டும், ஜெயமுள்ள வாழ்க்கை உண்டாகட்டும். இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு வெற்றியைக் தருவதற்காக ஸ்தோத்திரம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். வல்லமையுள்ள பிதாவே, ஆமென்.

**ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார் (நீதி 16:7)**

# போராட்டங்கள் நீங்க தியானப் பகுதி

**சங்கீதம் 120**

1. என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்குச் செவிகொடுத்தார்.

2. கர்த்தாவே, பொய் உதடுகளுக்கும் கபட நாவுக்கும் என் ஆத்துமாவைத் தப்புவியும்.

3. கபடநாவே, உனக்கு என்ன கிடைக்கும்? உனக்கு என்ன செய்யப்படும்?

4. பலவானுடைய கூர்மையான அம்புகளும், சூரைச்செடிகளை எரிக்கும் தழலுமே, கிடைக்கும்.

5. ஐயோ! நான் மேசேக்கிலே சஞ்சரித்தது போதும், கேதாரின் கூடாரங்களண்டையிலே குடியிருந்ததும் போதும்.

6. சமாதானத்தைப் பகைக்கிறவர்களிடத்தில் என் ஆத்துமா குடியிருந்ததும் போதும்!

7. நான் சமாதானத்தை நாடுகிறேன். அவர்களோ, நான் பேசும் போது யுத்தத்துக்கு எத்தனப்படுகிறார்கள்.

# 6. பில்லிசூனிய கட்டுகள் உடைய ஜெபம்

**யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை (எண் 23:23)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.** கண்மணிபோல பாதுகாக்கின்றவரே, எங்கள் குடும்பத்தையும், தொழிலையும், வேலையையும், உடைமைகளையும், உமது பாதுகாப்பின் கரங்களில் ஒப்புவித்து ஜெபிக்கிறேன். கல்வாரி சிலுவையில் சாத்தானின் வல்லமைகளை உரிந்துகொண்டவரே, எங்கள் குடும்பத்தின் ஆசீர்வாதத்திற்கும், தொழில் உயர்வுக்கும் விரோதமாகப் பொல்லாத மனிதர் களால் செய்யப்பட்ட பில்லிசூனியம் மாந்திரீகம், செய்வினை போன்ற சத்துருவின் ஆயுதங்கள் எதுவும் வாய்க்காதே போகட்டும்.

ஆண்டவரே, எங்களுக்கு விரோதமாகச் செயல்படும் எல்லா மனிதரின் சதி ஆலோ சனைகளுக்கும், நாசமோசங்களுக்கும் நீர் எங்களை

விலக்கிக் காத்தருளும். பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது என்ற உம்முடைய வசனத்தின்படி பில்லிசூனிய வல்லமை எங்களையும், இந்தத் தொழிலையும் நெருங்காதபடி வேலியடைத்து காத்தருளும். உம்முடைய பரிசுத்த இரத்தத்தினால் எங்களை மறைத்தருளும். நாங்கள் வசிக்கிற வீட்டையும், தொழில் செய்யும் இடத்தையும் உம்முடைய தூதர்களைக்கொண்டு காத்தருளும். ஆண்டவரே, பில்லிசூனியத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிற எங்களை உம் வல்லமையால் விடுவித்தருளும். எங்கள் கண்ணீரைத் துடைத்தருளும். எங்களுக்கு விரோதமாகக் செயல்படும் பில்லிசூனித்தின் வல்லமைகள் இயேசுவின் நாமத்தில் அழிந்து போகட்டும். இயேசுவே, நீர் எங்கள் ஜெபத்தைக் கேட்டு பில்லிசூனிய வல்லமையிலிருந்து எங்களை விடுவித்து, தொழிலை ஆசீர்வதிப்பதற்காக நன்றி **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். வல்லமையுள்ள பிதாவே, ஆமென்.**

**யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை (எண் 23:23)**

# பில்லிகுனிய கட்டுகள் உடைய தியானப் பகுதி

**சங்கீதம் 124**

1. மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பினபோது, கர்த்தர் நமது பக்கத்திலிராவிட்டால்,

2. கர்த்தர் தாமே நமது பக்கத்திலிரவிட்டால்,

3. அவர்கள் கோபம் நம்மேல் எரிகையில், நம்மை உயிரோடே விழுங்கியிருப்பார்கள்.

4. அப்பொழுது தண்ணீர்கள் நம்மேல் பாய்ந்து, வெள்ளங்கள் நமது ஆத்துமாவின் மேல் பெருகி,

5. கொந்தளிக்கும் ஜலங்கள் நமது ஆத்து மாவின்மேல் புரண்டுபோயிருக்கும் என்று இஸ்ரவேல் இப்பொழுது சொல்வதாக.

6. நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக ஒப்புக்கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

7. வேடருடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல நம்முடைய ஆத்துமா தப்பிற்று, கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம்.

# 7. பிசாசின் கிரியைகள் முறிக்கப்பட ஜெபம்

**இதோ... சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ள உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன் (லூக் 10:19)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

ஆண்டவரே, எங்களையும் குடும்பத்திலுள்ள ஒவ்வொருரையும் உமது வல்லமையுள்ள கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன். எங்கள் குடும்பத்திற்கு விரோதமாகப் போராடுகிற சாத்தானின் கிரியைகள் அழிந்து போகும்படி ஜெபிக்கிறேன். இயேசுவே, கிருபையாய் மனமிரங்கி எங்கள் குடும்பத்தை விடுவித்தருளும். பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கு வெளிப்பட்டவரே, எங்கள் குடும்பத்திற்கு விரோதமாகப் போராடும் பிசாசின் செயல்களுக்கு நீர் எங்களை விலக்கி விடுவித்து காத்தருளும். சாத்தானால் நாங்கள் ஒடுக்கப்படாதபடி உமது வல்லமையை எங்களுக்கு தந்தருளும்.

சாத்தானை ஜெயித்த இயேசுவே, சாத்தான் எங்களை மேற்கொண்டு ஜெயிக்காமல், நாங்கள் சாத்தானை ஜெயித்து வாழ உமது உன்னத பெலத்தால் எங்களை நிரப்பும். சாத்தானின் கிரியைகள் எங்களைத் தொடர்ந்து தாக்காதபடிக்கு எங்களைச் சுற்றிலும் வேலியடைத்தருளும். எங்கள் குடும்ப ஒற்றுமைக்கும், பரிசுத்தத்திற்கும், சமாதானத்திற்கும் விரோதமாகப் போராடும் பிசாசின் கிரியைகள் நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் அழிந்துபோகட்டும். ஆசீர்வாதத்தை சுதந்தரிக்க கூடாதபடிக்கு தடைப்பண்ணும் எல்லாக் கிரியைகளும் இயேசுவின் நாமத்தில் முறிக்கப்படட்டும். இயேசுவே, உம்முடைய இரத்தத்தினால் நீர் எங்கள் ஒவ்வொருவரையும் மறைத்துக்கொள்ளும். நீர் எங்கள் ஜெபத்தை கேட்டு சாத்தானின் கிரியைகளை முறியடித்து பூரண விடுதலையை தருவதற்காக ஸ்தோத்திரம். **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். வல்லமையுள்ள பிதாவே, ஆமென்.**

**சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய் சாத்தானை உங்கள் கால்களின்கீழே நசுக்கிப் போடுவார் (ரோம 16:20)**

# 8. கடன் பிரச்சினைகள் மாற ஜெபம்

**நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய் (உபா 28:12)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

ஆசீர்வதிக்கும் ஆண்டவரே, என்னை உமது ஆசீர்வாதத்தின் கரங்களில் ஒப்புவித்து ஜெபிக்கிறேன். நான் செல்வந்தனாகும்படி எனக்காகத் தரித்திரரான இயேசுவே, என் வாழ்வில் காணப்படும் எல்லா விதமான கடன் பிரச்சினையிலிருந்து என்னை முற்றிலும் விடுவிக்கும்படி உம்மை நோக்கி கண்ணீரோடு வேண்டுகிறேன். மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிற கர்த்தாவே, உம்மீது முழுமையான நம்பிக்கை வைக்காமல், சொந்த திறமைகளையும், மனிதருடைய உதவிகளையும், குடும்பத்தையும், நண்பர்களையும், நம்பி வாழ்ந்த தினால் நான் செய்த எல்லாப் பாவங்களையும் மிகுந்த இரக்கத்தின்படி இப்பொழுதே மன்னித்

தருளும். ஆண்டவரே, கடந்த காலங்களில் அறிந்தும், அறியாமலும் செய்த எல்லா தவறு களையும் மன்னித்தருளும்.

கடன் பிரச்சினையினிமித்தம் கண்ணீரோடு வாழும் என்னை கடன் பிரச்சனையிலிருந்து நீங்கலாக்கியருளும். புதிய தொழில் தொடங்கியதால், வீடு கட்டியதால், பிள்ளைகளின் படிப்பினால், திருமணம் செய்ததினால், மற்றவர்களுக்கு பண உதவி செய்ததினால் ஏற்பட்ட எல்லா கடன் பிரச்சினைகளிலிருந்தும் என்னை விடுவிக்கும்படி ஜெபிக்கிறேன். ஆண்டவரே, நான் செய்யும் தொழிலை, வேலையை ஆசீர்வதியும். குறைவுகளை நிறைவாக்கும். எல்லாப் பணத்தேவையையும் சந்தித்து, அநேகருக்கு கடன் கொடுக்கிறவனாக என்னை மாற்றும். இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு கடனிலிருந்து என்னை விடுதலையாக்கி ஆசீர்வதிப்பதற்காக ஸ்தோத்திரம். **இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் ஜெபிக்கிறேன் வல்லமையுள்ள பிதாவே, ஆமென்.**

**கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்;**
**அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்**
**(நீதி 10:22)**

# 9. குறைவுகள் நிறைவாக ஜெபம்

**கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது (சங் 34:10)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

குறைகளை நிறைவாக்கும் இயேசுவே, எங்கள் குடும்பத்தை நிறைவாக்கும் உம் கரங்களில் ஒப்புவிக்கிறேன். பல்வேறு தேவைகளின் மத்தியில் பல குறைவுகளுடன் காணப்படும் எங்கள் குடும்பம் சந்திக்கும் சிறுமையைக் கண்ணோக்கிப் பாரும். எங்கள் குடும்பத்தில் காணப்படும் குறைவு களையெல்லாம் தேவரீர் நிறைவாக்கி ஆசீர்வதித்து உயர்த்தும்படி ஜெபிக்கிறேன். கர்த்தரை நம்புகிற வனோ செழிப்பான் என்ற உம்முடைய வார்த்தை யின்படி எங்கள் குடும்பம் செழித்தோங்க நாங்கள் கையிட்டுச் செய்யும் இந்த வேலையையும், தொழிலையும் ஆசீர்வதியும். உழைப்பின் பலனை நூறு மடங்கு பெற்றுக்கொள்ள உதவும். எங்கள்

குடும்பத்தின் எல்லாப் பணத் தேவைகளையும் சந்தியும். எல்லாக் கடன் பிரச்சனைகளையும் மாற்றும். ஆண்டவரே, உம்முடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் என்ற வசனத்தின்படி எங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்கும். எங்கள் குடும்பத்தின்மேல் உமது ஆசீர்வாதம் தங்கியிருப்பதாக. சம்பத்தும், கனமும் உண்டாவதாக. பரிபூரண ஆசீர்வாதங்கள் தங்குவதாக. இஸ்ரவேல் ஜனங்களை குறைவுபடாதபடிக்கு வனாந்திரத்தில் பராமரித்து வந்த தெய்வமே, எங்களுக்கு எந்த குறைவும் வராதபடிக்கு பராமரித்து பாதுகாத்து வழிநடத்தும்படிக்கு கெஞ்சி மன்றாடுகிறேன். குடும்பத்தில் குறைவுகளை உண்டுபண்ணும் சத்துருவின் சகல வல்லமைகளையும் கடிந்து கொள்ளுகிறேன். இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு எல்லாக் குறைவுகளையும் நிறைவாக்கி ஆசீர்வதிப்பதற்காக உமக்கு கோடி ஸ்தோத்திரம். **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். வல்லமையுள்ள பிதாவே, ஆமென்.**

**என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம்... நிறைவாக்குவார் (பிலி 4:19)**

# 10. நல்ல வேலை கிடைக்க ஜெபம்

**உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும், நன்மையும் உண்டாயிருக்கும் (சங் 128:2)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

நன்மையானதை தரும் நல்லவரே, என்னை உமது கிருபையுள்ள கரங்களில் ஒப்புவித்து ஜெபிக்கிறேன். நீர் எனக்கு தந்த நல்ல ................................................ (பள்ளி, கல்லூரி, மருத்துவ, தொழிற்கல்வி) படிப்பிற்காக உமக்கு நன்றி. நான் படித்து முடிக்க வேண்டிய ஞானத்தையும், அறிவையும், பெலத்தையும் அருளிச் செய்ததற்காக நன்றி. படித்து முடிப்ப தற்கான எல்லா பொருளாதார தேவைகளையும் சந்தித்து, தேர்வில் சிறந்த முறையில் வெற்றி பெறச் செய்ததற்காக உமக்கு மனதார நன்றி செலுத்துகிறேன். இப்பொழுதும் இயேசுவே, எனது படிப்பிற்கேற்ற நல்ல வேலை கிடைக்கும்

படி அநுக்கிரகம் செய்தருளும். பல வருடங்களாக வேலையின்றி தவித்துக் கொண்டிருக்கும் என்மேல் கிருபையாயிரும். வேலையில்லாததால் நித்தமும் கண்ணீரோடு வாழும் என்னை கண்ணோக்கிப் பாரும். என்மேல் மனமிரங்கி ஒரு அற்புதத்தை செய்தருளும். ஆண்டவரே, எனது படிப்பிற்கேற்ற ஒரு நல்ல வேலையை உமது விருப்பத்தின்படி அரசாங்கத்திலோ, தனியார் நிறுவனத்திலோ கிடைக்க கிருபை செய்தருளும். இயேசுவே, எனக்கு உமது கண்களில் இரக்கம் கிடைப்பதாக. அதிகாரிகள், தொழிலதிபர்கள் கண்களிலே தயவு கிடைப்பதாக. கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான் என்ற உமது வார்த்தையின்படி தேவரீர் எனக்கு ஒரு நல்ல வேலையைத் தந்து என்னை ஆசீர்வதித்து உயர்த்தும். இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு நல்ல வேலையைத் தரபோவதற்காக உமக்கு ஸ்தோத்திரம். **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். வல்லமையுள்ள பிதாவே, ஆமென்.**

**வானத்தையும், பூமியையும் உண்டாக்கின**
**கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்**
**(சங் 121:2)**

# 11. புதிய தொழில் துவங்க ஜெபம்

**கர்த்தர் உன் களஞ்சியங்களிலும் கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார் (உபா 28:8)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

ஆண்டவரே, நீர் என் வாழ்வில் இதுவரை செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், நன்மைகளுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் உமக்கு நன்றி. செழிப்பை காணச்செய்யும் கர்த்தரே, இப்பொழுதும் புதிய தொழில் ஒன்றைத் துவங்க நீர் என் உள்ளத்தில் வைத்த நல்ல ஒரு விருப்பத்திற்காக உமக்கு ஸ்தோத்திரம். அதற்கேற்ற எல்லா வழி வாசல்களையும் திறந்து தந்ததற்காக ஸ்தோத்திரம். கர்த்தாவே, நீர் தந்த இந்த புதிய தொழிலை உம்முடைய கரங்களில் தருகிறேன். நீ கையிடும் எல்லா வேலையிலும் உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார் என்ற வசனத்தின்படி இந்த தொழிலை ஆசீர்வதியும்.

உம்முடைய ஆசீர்வாதம் இந்த தொழிலின்மேல் இருப்பதாக. தொழில் வளர்ந்து பெருகும்படி அதன்மேல் உமது கிருபை இருப்பதாக. தொழில் மேன்மையடைந்து உயரும்படி அநுக்கிரகம் செய்தருளும். ஆண்டவரே, வேலையின்றி தவிக்கும் அநேகருக்கு உதவும் வகையில் இந்தத் தொழில் அமைவதாக. இதன் மூலம் அநேக குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படுவதாக. இயேசுவே, இந்தத் தொழிலை திறம்பட செய்வதற்கான ஞானத்தையும், புத்தியையும், கிருபையையும் எனக்குக் கட்டளையிடும். பணத் தேவைகளைச் சந்தியும். நீடித்து உழைக்க கூடிய நல்ல உப கரணங்களை தந்தருளும். உண்மையான வேலை யாட்களைத் எனக்கு கிடைப்பார்களாக. அரசின் அனுமதி கிடைக்க அதிகாரிகளின் கண்களில் தயவு கிடைப்பதாக. தடைகள் விலகட்டும். இயேசுவே. நீர் என் ஜெபத்தைக் கேட்டு என் தொழிலை ஆசீர்வதிப்பதற்காக ஸ்தோத்திரம். **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். பிதாவே, ஆமென்.**

**ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்;**
**கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால்...**
**நூறுமடங்கு பவன் அடைந்தான் (ஆதி 26:12)**

# 12. எடுத்த காரியத்தில் வெற்றி பெற ஜெபம்

**குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும் (நீதி 21:31)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

ஜெயத்தை தரும் ஜெய கர்த்தாவே, என்னை உமது கிருபையுள்ள கரங்களில் ஒப்புவித்து ஜெபிக்கிறேன். அதிசயங்களையும், அற்புதங்களையும் செய்கிற இயேசுவே, என் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக நான் எடுத்திருக்கிற இந்த முயற்சியில் உம்முடைய கரம் என்னோடிருந்து எனக்கு வெற்றியைத் தரும்படி ஜெபிக்கிறேன். கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணுகிற தேவனே, கடந்த நாட்களில் என் வாழ்வில் ஏற்பட்ட எல்லாத் தோல்விகளையும், நஷ்டங்களையும் மாற்றும்படி கண்ணீரோடு ஜெபிக்கிறேன். சகலவித நன்மைகளையும் அருளும் இயேசுவே, இந்த காரியத்தைத் திறம்பட செய்து முடிக்க உமது தெய்வீக ஆலோசனையையும்,

ஞானத்தையும், வழி நடத்துதலையும் எனக்குத் தந்தருளும்படி ஜெபிக்கிறேன். தானியேலுக்கும், யோசேப்புக்கும் விசேஷித்த ஞானத்தை தந்ததை போல எனக்கும் விசேஷித்த ஞானத்தை தந்தருளும்படிக்கு கருத்தாய் ஜெபிக்கிறேன். மனிதரின் கண்களிலே தயவு கிடைக்கப்பண்ணும். எல்லா தேவைகளையும் சந்தியும். ஆண்டவரே, நீர் எனக்கு முன்பாக சென்று எல்லாக் கோணலான காரியங்களையும் செவ்வையாக்கும். புதிய வழி வாசல்களைத் திறந்தருளும். எல்லாக் காரியங்களையும் கைக்கூடிவரப் பண்ணும். ஆண்டவரே, இந்த காரியத்தில் வெற்றியைத் தந்து என்னை நீர் ஆசீர்வதியும். சத்துருவால் வரும் எல்லாத் தடைகளையும் நீக்கிப்போடும். இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு இந்தக் காரியத்தில் எனக்கு ஜெயத்தைத் தந்து ஆசீர்வதிப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் வல்லமையுள்ள பிதாவே, ஆமென்.**

**பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைக்கூடிவரப்பண்ணுவார்** (நெகே 2:20)

# 13. பதவி உயர்வு கிடைக்க ஜெபம்

**கர்த்தர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார் (சங் 113:7)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

உயர்த்தும் உன்னத தேவனே, உம்முடைய கரங்களில் என்னை தாழ்த்தி ஒப்புக்கொடுத்து ஜெபிக்கிறேன். செல்வத்தையும், கனத்தையும் உயர்வையும், மேன்மையையும் அளிப்பவரே, உம்முடைய கரத்திலிருந்து நான் பெற்றுக் கொண்ட இந்த நல்ல வேலைக்காக, பதவிக்காக, உயர்வுக்காக உமக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து உமக்கு நன்றிபலிகளை ஏறெடுக்கிறேன். இந்த பதவியில் உண்மையாக இருக்கவும், கடினமாக உழைக்கவும், நிர்வாகத்தை திறம்பட நடத்தவும் எனக்கு ஞானத்தை தந்தீர். அதற்காக உமக்கு நன்றி. அலுவலக அதிகாரிகளின் கண்களில் எனக்கு தயவு கிடைக்கப் பண்ணினதற்காக நன்றி.

கர்த்தர் உன்னை மேன்மேலும் ஆசீர்வதிப்பார் என்ற வசனத்தின்படி இப்பொழுதும் என்னுடைய பதவி உயர்வுக்காக உம்மை நோக்கி பார்க்கிறேன். நீர் என்மேல் கிருபையாய் மனமிரங்கி மேன்மேலும் ஆசீர்வதித்து உயர்த்தும். கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப்படுவான் என்ற வசனத்தின்படி எனக்கு பதவி உயர்வை அருளிச்செய்யும்படி ஜெபிக்கிறேன். மேல் அதிகாரிகளின் கண்களில் தயவும், இரக்கமும் கிடைக்கும்படி அநுக்கிரகம் செய்தருளும் அதற்கான வழிவாசல்களைத் திறந்தருளும். மனிதர்களாலும், பிசாசினாலும் வரும் எல்லாத் தடைகளையும் நீக்கியருளும். சக மனிதர்கள் மத்தியில் என் தலையை உயர்த்தி மேன்மைப்படுத்தி என்னை சாட்சியாய் நிறுத்தும்படிக்கு ஜெபிக்கிறேன். இயேசுவே. நீர் என் ஜெபத்தைக் கேட்டு பதவி உயர்வைக் கொடுக்கபோகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். வல்லமையுள்ள பிதாவே, ஆமென்.**

**ஆனாலும் கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர் (சங் 3:3)**

# 14. உறவினர்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபம்

**வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது (ஆதி 39:5)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

சர்வ வல்லமையுள்ள ஆண்டவரே, நீர் எனக்கு கொடுத்திருக்கிற என்னுடைய குடும்ப உறவினர்கள் ஒவ்வொருவருக்காகவும் உமக்கு ஸ்தோத்திரங்களை செலுத்துகிறேன். அவர்கள் ஒவ்வொருவரையும் உம்முடைய கிருபையின் கரங்களில் ஒப்புவிக்கிறேன். ஆண்டவரே, என் உறவினர்கள் அனைவரையும் நீர் ஆசீர்வதித்து உயர்த்தும். மன்னிக்கிறதற்கு தயைபெருத்த தேவனே, என்னுடைய உறவினர்கள் அறிந்தும், அறியாமலும் உமக்கு விரோதமாகச் செய்த எல்லாப் பாவங்களையும் மீறுதல்களையும் கிருபையாய் மன்னியும். உம்முடைய பரிசுத்த

இரத்தத்தினால் அவர்களை முற்றிலும் முழுவதும் கழுவி பரிசுத்தமாக்கியருளும். எங்கள் பரிகாரியாகிய கர்த்தாவே, அவர்கள் ஆவி ஆத்தும சரீரத்தில் விடுதலையை கட்டளையிடும். வியாதிகள், நோய்கள், சாபங்கள் நீங்கி போகட்டும். உம் வல்ல நாமத்தினாலே அவர்களுக்கு அற்புதம் நடக்கட்டும். குறைவுகளை நிறைவாக்கும். கடன் பிரச்சினைகள் மாறட்டும். சாத்தானின் கட்டுகளிலிருந்து அவர்களை விடுதலையாக்கும். சாத்தானால் வரும் எல்லாத் தீங்குகளுக்கும் விலக்கிக் காத்துகொள்ளும். இயேசுவே, சாபங்களை நீக்கி சமாதானத்தி னாலும், மகிழ்ச்சியினாலும் அவர்களை நிரப்பும். கையிட்டுச் செய்கிற வேலை, தொழிலை ஆசீர்வதியும். அவர்கள் உம்மை அறிந்துகொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் கிருபை செய்யும். ஜெபத்தைக் கேட்டு என் உறவினர்களை ஆசீர்வதிப்பதற்காக ஸ்தோத்திரம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தாழ்மையோடு ஜெபிக்கிறேன். பிதாவே, ஆமென்.

**யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார் (யோபு 42:10)**

# தியானப் பகுதி
# (1)

**சங்கீதம் 121**

1. எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.

2. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்

3. உன் காலைத் தள்ளாவொட்டர்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்.

4. இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை

5. கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.

6. பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை.

7. கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

8. கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங்காப்பார்.

# தியானப் பகுதி
# (2)

### சங்கீதம் 5

1. கர்த்தாவே, என் வார்த்தைகளுக்குச் செவி கொடும், என் தியானத்தைக் கவனியும்.

2. நான் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணு வேன்; என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும்.

3. கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்.

4. நீர் துன்மார்க்கத்தில் பிரியப்படுகிற தேவ னல்ல; தீமை உம்மிடத்திலே சேர்வதில்லை.

5. வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்கமாட்டார்கள்; அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர்;

6. பொய் பேசுகிறவர்களை அழிப்பீர்; இரத்தப் பிரியனையும் சூதுள்ள மனுஷனையும் கர்த்தர் அருவருக்கிறார்.

7. நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசித்து, உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்துகொள்ளுவேன்.

# ஜெபத்தைக் கேட்கும் இயேசுகிறிஸ்து

**ஜெபத்தில் நீங்கள் விசுவாசத்துடன் கேட்பதையெல்லாம் பெற்றுக்கொள்வீர்கள் (மத் 21:22)**

- ★ இயேசுகிறிஸ்து உன் மன்றாட்டைக் கேட்டார்; கண்ணீரையும் கண்டார். இதோ, உன்னைக் குணப்படுத்தினார் (2அர 20:5)

- ★ நானோவெனில் இயேசுகிறிஸ்துவை நோக்கி கூவுவேன்; அவர் என்னை மீட்டுக்கொள்வார் (சங் 54:16)

- ★ காலையிலும் மாலையிலும் நண்பகலிலும் புலம்புகிறேன்; வெருமூச்சு விடுகிறேன்; இயேசுகிறிஸ்து என் குரலுக்குச் செவி சாய்ப்பார் (சங் 54:17)

- ★ இயேசுகிறிஸ்து, நீதிமான்களுடைய வேண்டுதல்களைக் கேட்டருள்கிறார் (பழ 15:29)

★ இயேசுகிறிஸ்து, உங்கள் கூக்குரலுக்கு உடனே செவிசாய்த்து அருள்செய்வார் (இசை 30:19)

★ இயேசுகிறிஸ்துவை கூவியழைப்பாய், அவரும் உன் மன்றாட்டைக் கேட்டருள்வார் (இசை 58:9)

★ உங்களை மீட்க முடியாத அளவுக்கு இயேசு கிறிஸ்துவின் கை குறுகிவிட வில்லை; உங்கள் கூக்குரலை கேட்க முடியாத அளவுக்கு அவருடைய செவி மந்தமாகிவிடவில்லை (இசை 59:1)

★ நீங்கள் இயேசுகிறிஸ்துவை வேண்டு 7வீர்கள்; அவர் உங்கள் மன்றாட்டைக் கேட்டருளுவார் (எரே 29:13)

★ நீங்கள் இயேசுகிறிஸ்துவை தேடுவீர்கள்: முழு இதயத்தோடு தேடி அவரை கண்டடைவீர்கள் (எரே 29:13)

★ கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், கண்டடைவீர்கள்; தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும் (மத் 7:7)

*(கத்தோலிக்க வேதாகமத்திலிருந்து... )*

# இயேசுவே, நீரே என் நம்பிக்கை

**சேனைகளின் கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங் 84:12)**

★ நாங்கள் உம்மை நம்பியிருக்கிறபடியே உமது கிருபை எங்கள்மேல் இருப்பதாக (சங் 33:22)

★ கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை; ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பி யிருப்பார்கள் (சங் 9:10)

★ எளியவன் என்றைக்கும் மறக்கப்படுவதில்லை; சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒரு போதும் கெட்டுப்போவ தில்லை (சங் 9:18)

★ கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந் திருக்கிறார் (நாகூம் 1:7)

★ கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான் (சங் 40:4)

★ உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர் மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார் (சங் 37:5)

★ உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதை யுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர் (ஏசா 26:3)

★ கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக் கலத்திலே வைக்கப்படுவான் (நீதி 29:25)

★ கர்த்தரை நம்பியிருக்கிறவனோ தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வான் (ஏசா 57:13)

★ கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும் (சங் 32:10)

★ கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல இருப்பார்கள் (சங் 125:1)

**நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது (நீதி 23:18)**

# ஆசீர்வாத வாக்குத்தத்தங்கள்

**தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின்மேல் இருப்பதாக (சங் 3:8)**

★ கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார்; கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார் (சங் 29:11)

★ நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் (ஆதி 12:2)

★ உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார் (உபா 28:1)

★ உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கும்படி கொடுக்கும் தேசத்தில், உன்னை மேன்மேலும் ஆசீர்வதிப்பார் (உபா 15:5)

★ உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி 26:5)

★ கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர் (எண் 6:24)

★ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் (சங் 37:22)

★ உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன், பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி 12:3)

★ கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார் (சங் 115:12)

★ நீ சகல ஜனங்களைப் பார்க்கிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் (உபா 7:14)

★ உன் கை செய்யும் வேலையிலெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார் (உபா 14:29)

★ கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார் (நீதி 10:22)

★ உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் (நீதி 28:20)

★ உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் (ஏசா 44:3)

★ கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ள தாக்குவார் (ஏசா 58:11)

★ கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததியென்று அறிந்துகொள்வார்கள் (ஏசா 61:9)

★ உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் (உபா 28:5)

★ நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்; நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் (உபா 28:6)

★ அவர் உன் வாசல்களின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தி, உன்னிடத்திலுள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் (சங் 147:13)

**இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்**

**(எண் 24:1)**

# விசேஷித்த ஜெபக்குறிப்புகள்

**லூக்கா 11:9**

★ ................................................................................

★ ................................................................................

★ ................................................................................

★ ................................................................................

★ ................................................................................

★ ................................................................................

★ ................................................................................

★ ................................................................................

★ ................................................................................

★ ................................................................................

★ ................................................................................

★ ................................................................................

# முழங்கால் யுத்தம்

ஜெபப்புத்தகங்கள் மற்றும் பிற

வெளியீடுகள் பற்றிய முழு

விவரங்களை அறிந்துகொள்ள

அணுக வேண்டிய முகவரி...


முழங்கால் யுத்தம்

**46/AA, சாந்தி நகர் மேற்கு,**

**3-வது குறுக்குத்தெரு, ஓசூர்-635 109.**

**செல்: 70944 99959/69**

email: muzhangalyuttham100@gmail.com

muzhangalyutthambookministries@gmail.com



Muzhangal Yuttha

முழங்கால் யுத்தம்-பிரார்த்தனை வேளை
(விடுதலைக்காக) என்கிற இந்த
ஜெபக்கையேட்டினைப் பயன்படுத்தி
மிகவும் எளிய முறையில் ஆண்டவராகிய
இயேசுகிறிஸ்துவினிடம் பிரார்த்தனை
செய்து பிரச்சினைகளிலிருந்து
விடுதலையைப் பெற்றுக் கொள்ளலாம்!

"PRARTHANAI VEZHAI"
(For Deliverance)


ஜெபத்தினால் மறுரூபம்

MUZHANGAL YUTTHAM
INTERCESSORY PRAYER MINISTRIE
46/AA, SHANTHI NAGAR (WEST
HOSUR - 635 109. Tel : 70 944 999 5
Email : muzhangalyutthambookministries@gmail.co
muzhangalyuttham100@gmail.co